Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.11/2020

**P.W**.3 (LW3)

| | |
|---|---|
| Name | : **திரு.தெய்வசிகாமணி** |
| Father/Husband Name | : திரு,ராமசந்திரன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2,4,5 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 3வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது சட்ராஸ் கிராமத்தில் குடியிருந்து ஒப்பந்த வேலை செய்து வருகிறேன். சாட்சி புகழேந்தி என்பவரை எனக்கு தெரியும். சாட்சி நாகூரான் என்பவரையும் எனக்கு தெரியும்.**

**2) சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை நேரத்தில் சட்ராஸ் பஜாருக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்பி வந்துக் கொண்டிருந்த போது டாக்டர் புகழேந்தி கிளினிக் அருகே கூட்டமாக இருந்தார்கள். அங்கு டாக்டர் புகழேந்தி என்பவருக்கும் சுற்றி இருந்த சிலரும் வாக்குவாதம் செய்துக் கொண்டிருந்தார்கள். ஆஜர் எதிரிகள் அரிகிருஷ்ணன் மற்றும் சுரேஷ் அந்த கூட்டத்தில் இருந்தார்கள். மற்றொரு ஆஜர் எதிரியும் அந்த கூட்டத்தில் இருந்தார் அவர் பெயர் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில்**

துரைசாமி என்பவரும் அவரது மகனும் வாக்குவாதம் செய்துக் கொண்டிருந்தார்கள். எதற்காக வாக்குவாதம் செய்தார்கள் என்கிற விவரம் எனக்கு தெரியாது. நான் சுமார் 10 நிமிடங்கள் வரை பார்த்துக் கொண்டிருந்தேன். பின்னர் அங்கிருந்து சென்றுவிட்டேன். சம்பவ இடத்தில் டாக்டர் புகழேந்தியின் உதவியாளர் நாகூரான் அந்த இடத்தில் இருந்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் 10 நிமிடங்கள் வரை அங்கு நின்றுக் கொண்டு வாக்குவாதம் நடந்ததை மட்டும் தான் பார்த்தேன். அதன்பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எதற்காக வாக்குவாதம் ஏற்பட்டது என்கிற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விப்பட்டு தான் தெரிந்துக் கொண்டேன் என்றாலும், சம்பவம் நடந்தபோது 10 நிமிடம் வரை அவர்கள் வாக்குவாதம் நடந்ததை பார்த்தேன். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் சுரேஷ், அரிகிருஷ்ணன் மற்றும் எதிரி துரைசாமி ஆகியோர்கள் என்னுடைய ஊர்காரர்கள் என்பதால் அவர்களை எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. புகார்தாரர் டாக்டர் புகழேந்தி எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

# D E P O S I T I O N O F W I T N E S S

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.11/2020

**P.W**.4 (LW5)

| | |
|---|---|
| Name | : **திரு.யுவராஜ்** |
| Father/Husband Name | : திரு,சௌந்தர்ராஜன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

2,4,5 எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள். 3 வது எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது சட்ராசில் குடியிருந்து ஒப்பந்த வேலை செய்து வருகிறேன். சாட்சி துளசி என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.**

**2) கடந்த 2018 ம் வருடம் ஒரு நாள் மதியம் 12.00 மணியளவில் சாப்பிடுவதற்காக நானும், துளசி என்பவரும் இரு சக்கர வாகனத்தில் சென்றுக் கொண்டிருந்தோம். அப்போது போலிசார் டாக்டர் புகழேந்தி கிளினிக் அருகே விசாரணை செய்து படம் வரைந்துக் கொண்டிருந்தார்கள். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைடம் சம்பவ இடத்தில் வைத்து போலிசார் வரைந்தார்கள். அதில் என்னையும், துளசி என்பவரையும் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக் கொண்டார்கள்.**

அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நானும் துளசியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **(பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, மாதம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என் முன்னிலையில் பார்வை மகசரை தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.